# உடற்கல்வி– உளவியல்

- உளவியல் என்ற சொல்லை உருவாக்கியவர் **கோக்கல்.**
- **உளவியல் என்ற சொல்லின் பொருள்:**
- சைக்கலாஜி என்ற சொல்லில் சைக்கி என்பது மனம், உயிர் அல்லது ஆன்மா **(Soul)** எனவும் லோகஸ் என்பது அறிவியலின் பிரிவு **(Study)** எனவும் பொருள்படும். மனித நடத்தையை முறையாக ஆய்வு செய்யும் அறிவியலின் பிரிவே உளவியல் ஆகும். எனவே உளவியல் ஒரு அறிவியலே.**(Psychology is a Science).** மனதினை பற்றி படிப்பதால் உளவியலானது மனவியல் என்றும் அழைக்கப்படுகிறது.

- **உளவியல் - வரையரைகள்:**
- உளவியல் மனித நடத்தையையும் அனுபவங்களையும் ஆராயும் அறிவியல் என்றும் அழைக்கப்படுகிறது.
- உளவியல் தற்போது **உயிர்-சமுகஅறிவியல்** (**Bio-Social Science)** என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது.
- மேலும் முன் (**Munn)** என்பாரது கூற்றுப்படி உளவியலானது காலத்திற்கேற்ப மனம், அறிவு, ஆன்மா, நடத்தை என காலத்தே நிறம் மாற்றிக்கொண்டு இறுதியாக நடத்தை(**Behaviour)** என உறுதிப்படுத்தியுள்ளது.
- நடத்தை என்பது வெளிப்புறம் கண்கூடாக காணக்கூடியது புற செயல் மட்டுமே. அதனை ஆராய்வதே உளவியல் என கூறுவது - **நடத்தை கோட்பாட்டியலாளர்கள் (Behaviourists).**
- **ஜே.பி வாட்சன்** என்ற நடத்தை கோட்பாட்டு உளவியலாளர், உளவியல் என்பது **நேர்மறை நடத்தை அறிவியல்** என்கிறார். அவர் நடத்தையை **S-O-R (Stimulus – Organism - Response)** என்ற வாய்ப்பாடாக குறிப்பிட்டுள்ளார். அதாவது நடத்தை என்பது தூண்டலானது உயிரியின் மீது செயல்பட்டு வெளிப்படுத்தும் நிகழ்வே என குறிப்பிடுகிறார். எனவே இக்கூற்றுப்படி தூண்டலுக்கு உயிரி வெளியிடும் துலங்கலே நடத்தை என அறியப்படுகிறது.

- **உளவியலின் நோக்கம்:**
- உளவியல் என்பது நடத்தையை கணித்தல், நடத்தையை கட்டுப்படுத்துதல் அல்லது மாற்றியமைத்தல், நிகழ்விற்கு பின் காரணம் கண்டறிதல், நடத்தை நடைபெறாமல் எதிர்காலத்தில் தடுத்தல் **(Predicting the Behaviour, Controlling or Modifying the Behaviour, Reasoning the Behviour and Preventing the Behaviour)**ஆகிய நோக்கங்களை அடிப்படையாக கொண்டது.

- **வடிவமைப்புக்கோட்பாடு (Structuralism)** – வெளியிட்டவர் **டிட்சனர்.**
- இக்கோட்பாட்டின்படி மனம் அறிவு சார் இயக்கமுடையது. இதன் கூறுகள் புலன் உணர்ச்சி, புலன் உணர்வு, மனபிம்பங்கள் அகியவையே. எனவே மனஇயக்கத்தின் வடிவமைப்பை மற்றும்
- தன்மையை அறிய அகநோக்க முறையே **(Introspection method)** சிறந்துது. இக்கோட்பாட்டின்படி உளவியல் உணர்ந்து செயல்படும் நடத்தைகளை மட்டுமே ஆராய்வதாகும்.

- **உளவியலை நடத்தையியல் என கூறியவர்கள்:**
- வாட்சன், டோல்மேன், கத்தரே, ஸ்கின்னர்.
- சிந்தனை உள்ளத்தின் செயல்பாடு என்பதை மறுத்தவர் - **வாட்சன்**
- மக்டுகலின் இயல்பூக்கம் - மரபை வலியுறுத்துகிறது.
- (சூழ்நிலைவாதிகள் - வாட்சன் மற்றும் பர்னார்டு) பர்னார்டு - இவரது கொள்கை – பயம் பாலுணர்ச்சி கூடிவாழ்தல் ஆகிய இயல்பூக்கங்களை நாம் அவற்றின் வழியே செயல்பட விடுவதில்லை. அவற்றை கட்டுப்படுத்தி நெறிப்படுத்துகிறோம். எனவே சூழலே ஒருவனது நடத்தைக்கு காரணம். எனவே மனித நடத்தை என்பது தூண்டலுக்கு செய்யப்படும் துலங்கள் அல்லது மறிவினையே (**Reflex**) என கூறினார்.
- **கெஸ்டால்ட்** - கோட்பாடு நடத்தை கோட்பாடிற்கு எதிரானது – 1912ம் ஆண்டு வெளியிடப்பட்டது. கெஸ்டால்ட் **ஜெர்மானிய** என்ற சொல்லிற்கு **முழுமையான உருவம், காட்சி அல்லது வடிவம்** என பொருள்- காட்சிப்பொருள்களை முழுஉருவ அமைப்புடன் காணுதல். **முழுமை காட்சி கோட்பாட்டின்படி** மனித நடத்தை – புலன்காட்சி அடிப்படையில் அமைகிறது. புலன்காட்சிக்கு சிந்தனை மற்றும் அறிவு தேவை.
- **உளப்பகுப்பாய்வு கோட்பாடு – சிக்மண்ட் பிராய்டு** – வெளியிட்டார். இக்கோட்பாட்டின்படி மனித நடத்தையை தீர்மானிப்பது – **நனவிலி(ஆழ்மனம்)மனமே.** எனவே மனிதரை அறிதுயில் **(Hypnotism)** நிலைக்கு ஆழ்த்தி நடத்தை பிரச்சினைகளை தீர்க்கமுடியும் என நிறுபித்தார்.
- **தனிநபர் உளவியல் (Individual Psychology)- ஆட்லர்,**
- **பகுப்பாய்வு உளவியல் (Analytical Psychology)- கார்ல் யூங்**
- **கார்ல் ரோஜர்ஸ்** மற்றும **மாஸ்லோ** – ஆகியோர் தோற்றுவித்தது **மனிதநேய உளவியல்.**
- நடத்தை – 2 வகை அனுபவங்களால் விளைகின்றன.
- **நனவு அனுபவங்கள்:** பசி, வலி, காயம், பணம் கொடுத்தல்.
- **நனவிலி அனுபவங்கள்:** காரணமின்றி கோபப்படுதல், சிலரிடம் உடனே நட்பு கொள்ளுதல், பழைய மோசமான அனுபவங்கள்
- **வெபர் - உளவியல் பரிசோதனைகளுக்கு** வித்திட்டவர். புலன் நுகர்வுகளை அளவிடும் விதியை ஆராய்ந்து வெபர் விதியை உண்டாக்கியவர்
- **∴பெட்ச்னர் - உளஇயற்பியல் (Psychophysics)** என்ற நூலை இயற்றியவர். வெபரின் ஆய்வை செம்மைப்படுத்தி புறத்தூண்டலுக்கும் புலன் உணர்ச்சிகளுக்கும் உள்ள தொடர்பை அளவிட்டவர்.
- **வில்காம் உண்ட்டு** – ஜெர்மெனி **லீப்ஸிக்** என்ற இடத்தில் முதலில் உளவியல் ஆய்வுக்கூடத்தை அமைத்தவர்.

- **பிரான்ஸிஸ் கால்டன்** - புள்ளியியல் அடிப்படையில் தனிநபர் வேறுபாடுகளை அளவிட்டவர்.
- **கேட்டல்-** தனிநபர் வேறுபாடுகளை உளவியல் சோதனை மூலம் அளவிட்டவர்.
- **மெஸ்மர்** - மருத்துவ உளவியல் முறைகளை வெளியிட்டவர்
- **பியாஜே** - அறிவு சார்ந்த உளவியல் கோட்பாடு
- **பிராய்டு** – உளப்பகுப்பாய்வு, உளப்பாலுக்கம்.
- நுண்ணறிவுச்சோதனைகளின் தந்தை – **ஆல்பிரட் பீனே**
- **வெக்ஸ்லர்** - வயதுவந்தோர்க்கான நுண்ணறிவு அளவுகோல்
- கருவிசார் ஆக்க நிலையுறுத்தம் மற்றும் துலங்கல் சார் ஆக்க நிலையுறுத்தம்- **ஸ்கின்னர்**

- **உளவியல் முறைகள்:**
- பல்வேறு உளவியல் முறைகள் உள்ளன. இம்முறைகள் உளவியலில் நடத்தையை கணிக்க,படிக்க உதவுகிறது.

**அகநோக்க முறை:**

- இம்முறையை கண்டறிந்தவர் - **உண்ட்டு.** தனது அனுபவங்களை தானே உற்று நோக்குதல், பகுத்தறிதல், விவரித்தல் ஆகியன அகநோக்க முறையின் அடிப்படை.
- அகநோக்கமுறையில் **அககாட்சி தாவல்** பயன்படுத்தப்படுவதாக **டிட்சனர்** கூறுகிறார்.

**உற்று நோக்கல் முறை:**

- பிறரது நடத்தையை கூர்ந்து கவனித்தறிந்து நடத்தையை படித்தல் உற்று நோக்கல் முறை ஆகும். இதில் பல வகைகள் உள்ளன.
- **பங்கேற்ப்பு ∴ பங்கேற்கா உற்று நோக்கல்**
- **இயற்கையான ∴ செயற்கையான அல்லது கட்டுப்படுத்தப்பட்ட உற்றுநோக்கல்.**

www.Padasalai.Net

**பரிசோதனை முறை:**

- ஒரு **கருதுகோளை** உருவாக்கி அதனை சோதிக்கும் முறை. (இது ஒரு கட்டுப்படுத்தப்பட்ட உற்றுநோக்கல் முறையை சார்ந்தது) சோதனையில் பயன்படுத்தப்படும் இரு மாறிகள் 1) தனித்த மாறி - **X** அச்சு. 2) சார்பு மாறி -**Y** அச்சு. பரிசோதனைகளில் பொதுவாக ஏற்ப்படுவது எதேச்ச பிழைகள் **(Factual Errors)** எல்லா அறிவியல் முறைகளுக்கும் பொதுவானது பரிசோதனை முறை.

**வாழ்க்கை சம்பவ முறை:**

- வாழ்க்கையில் ஏற்ப்படும் முக்கிய நிகழ்ச்சிகளின் தொகுப்பு. இதன் மூலம் ஒருவரது நடத்தை முறைகளை படிக்க இயலும்.

**கள ஆய்வு முறை:**

- இம்முறையும் ஒரு இயற்கையான உற்று நோக்கல் முறையே ஆகும். சம்பவம் நிகழும் இடத்திலேயே (உதாரணமாக மருத்துவமனை,தொழிற்சாலை)நேரடியாக சென்று உற்றுநோக்கி ஆய்வு செய்யும் முறை.

**வளர்ச்சி ஆய்வு முறை:**

- இரண்டு முறைகள்: 1) **நீள் ஆய்வு முறை** 2) **குறுக்கு ஆய்வு முறை**

**நீள் ஆய்வு முறை:**

- குழந்தை பருவம் தொடங்கி ஒரு குறிப்பிட்ட நடத்தையை தொடர்ச்சியாக வெகு காலம் ஆய்வு செய்தல். இதில் குறைவான எண்ணிக்கையிலான உதாரணங்களை மட்டுமே படிக்க இயலும். பியாஜே மற்றும் புருணரின் ஆய்வு இம்முறைப்பட்டது.

**குறுக்கு ஆய்வு முறை:**

- ஒரே நடத்தையானது பல்வேறு இடங்களில் ஒரே குறுகிய நேரத்தில் படித்தறியப்படுவது. இதில் அதிக எண்ணிக்கையிலான உதாரணங்களை படிக்க இயலும். அரசினால் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் வெற்றி தோல்வியை ஒரே நேரத்தில் மாநிலம் முழுவதும் அரசு ஆய்வு செய்தல் இம்முறையை சார்ந்தது.

**தனியாள் ஆய்வு முறை:**

- மாணவரின் தனிப்பட்ட பிரச்சினைகளை கண்டறிந்து தீர்க்க ஆசிரியர் அதிகம் பயன்படுத்தும் முறை. தனியாள் ஆய்வு முறையின் மறு பெயர் - மருத்துவ முறை மற்றும் தனியலகு ஆய்வு முறை மற்றும் நீண்ட திரள் பதிவேட்டு ஆய்வு முறை

**வினாவரிசை முறை:**

- உளவியலிலும் சமுகவியலிலும் அதிகம் பயன்படுத்தப்படும் முறை – வினாவரிசை முறை. இம்முறையை ஆராய்ச்சிக்கு முதன்முதலில் பயன்படுத்தியவர் - **பிரான்ஸிஸ் கால்டன்**

**வாக்கெடுப்பு முறை –**

- வினாவரிசை முறையின் ஒரு வகையே. இரண்டு வகையான வினாவரிசை முறைகள் உள்ளன.
  - **தர்ஸ்டன் முறை** (ஆம் இல்லை வகையான வினாக்கள்)
  - **லிக்கர்ட் முறை** (தரஅளவுகோல் முறையில் 3 புள்ளி தர அளவீடுகளிலிருந்து 7 புள்ளி தர அளவீடு வரை)

**வேற்றுமை முறை:**

- ஆராயப்படும் பிரச்சினையில் நமது குறுக்கீடின்றி இயற்கையாகவே காணப்படும் இரண்டு மாறுபட்ட அல்லது வேறுபட்ட நிலைகளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை கொண்டு கண்டறியப்படுவது இம்முறை. உதா: இயற்கையாகவே முழு ஆரோக்கியமாக பிறந்த குழந்தை மற்றும் குறைபாடுகளுடன் பிறந்த குழந்தைகளை ஒப்பிட்டு வேறுபடுத்தி நடத்தைகளை படித்தல்.

**சமுக அளவியல் முறை:**

- சமுக அளவியல் (**Sociometry**) என்பதும் உளவியல் முறையே. சமுக தொடர்பானது தர(**Social Relationship**)அளவீடு செய்யப்படுகிறது. வகுப்பறையில் மாணவரிடையே காணப்படும் தொடர்புகள் மற்றும் சமுக உறவுகள் இம்முறையின் மூலம் கண்டறியப்படுகிறது. மாணவர்களின் சமுக விருப்பங்கள், சமுக மனப்பான்மைகள் ஆகியவற்றை அளக்க முடியும். இம்முறைக்கு **மாணவர் மதிப்பீட்டு நுண்முறை** எனவும் பெயர். நட்சத்திர (**Star**)அந்தஸ்து பெற்றவர், தனிமைப்படுத்தப்பட்டவர்(**Isolate**)> சங்கிலித்தொடர் இணைப்பு(**Chains**) மற்றும்

நேர் எதிர் இணைப்புகள;(**Mutual Pairs)** ஆகியன இப்படத்தின் மூலம் கண்டறியப்படுகிறது. இம்முறையின் முடிவில் வரையப்படும் வரைபடம் **சமுக அளவியல் வரைபடம் (Sociogram)** எனப்படும்.

<u>உளவியலின் பிரிவுகள்:</u>

❖ **பொது உளவியல; (General Psychology):**

❖ அனைத்து உளவியலுக்கும் பொதுவானது. உளவியல் பொதுக்கருத்துக்களை மனிதன் விலங்கு தாவரம் என வேறுபாடின்றி படிப்பது பொது உளவியல் எனப்படும். இதில் புலன்காட்சி, மனஉணர்ச்சி, ஊக்குவித்தல், கற்றல், சிந்தித்தல், பொதுமைப்படுத்துதல், காரணகாரியம் கண்டறிதல் போன்ற பொதுவான உளவியல் கருத்துக்கள் விவாதிக்கப்படுகின்றன.

❖ குழந்தை உளவியல்(**Child Psychology):**

❖ குழந்தைபருவம் முதல் குமரப்பருவம் வரை உடல் மற்றும் உள்ளத்தளவில் ஏற்ப்படும் மாற்றத்தை பற்றி படிக்கும் பிரிவு **குழந்தை பருவ உளவியல்** எனப்படுகிறது. இதில் குழந்தை உளவியல்(**Infant Psychology)** மற்றும் குமரப்பருவ உளவயல்(**Adolescent Psychology)** ஆகியன அடங்கும்.

❖ நெறிபிறழ் உளவியல்(**Abnormal Psychology):**

❖ அசாதாரண நடத்தைகளை விவரிக்கும் உளவியலின் பிரிவு. இது மனநலமருத்துவத்துடன் அதிக தொடர்புடையது. குற்றவியல் நடத்தை, நெறிபிறழ் நடத்தை ஆகியவற்றை இவ்வுளவியல் அதிகம் ஆராய்கிறது. பிராய்டின் உளப்பகுப்பாய்வு இவ்வகை உளவியலே. இதில் உளத்தடுமாற்றங்கள் **(Psychosis)** மற்றும் நரம்பு நோய்கள் (**Neurosis)** ஆகியன படிக்கப்படுகின்றன.

❖ **உடற்கூறு உளவியல் (Physiological Psychology):**

❖ நடத்தையானது உடல் செயல்பாட்டு முறைப்படி ஆராயப்படுகிறது. நரம்பு மண்டலம், நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாடு, புலன்கள், மற்றும் பல்வேறு உடல் செயல்பாட்டு மண்டலங்களின் செயல்பாடுகள் எவ்வாறு நடத்தையை பாதிக்கப்படுகிறத என இப்பிரிவில் ஆராயப்படுகின்றன.

❖ ஒப்பீட்டு உளவியல் (**Comparative Psychology):**

❖ மனிதனின் நடத்தையை பிற உயிரிகளான தாவரங்கள் மற்றும் விலங்குகளின் நடத்தையுடன் தெடர்புபடுத்தி ஒற்றுமை மற்றும் வேறுபாடுகளை ஆராயும் உளவியல் ஆகும்.

❖ சமுக உளவியல் (***Social Psychology):***

❖ மனிதன் ஒரு சமுக விலங்கு – அரிஸ்டாட்டில். ஒரு குழுவில் தனிமனித நடத்தை மற்றும் குழு நடத்தை ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளை கண்டறிந்து அவற்றின் தொடர்புகளை ஒப்பிடுதல்.

❖ நடைமுறை உளவியல்:

❖ நடைமுறை உளவியல் என்பது 3 பகுதிகளின் தொகுப்பு. இதில்

❖ தொழில்

❖ வாழ்க்கை நடைமுறை

❖ கல்வி உளவியல் அடங்கி உள்ளன. மையர்ஸ் தொழில் வளர்ச்சிக்கு உதவியுள்ளார்.

- நடைமுறை வாழ்வில் பயன்படும் உளவியலின் சில பிரிவுகள் (Applied Psychology) கீழே தரப்பட்டுள்ளன. அவை
  - **தொழில் உளவியல் (Industrial Psychology)-** தொழிற்சாலை, தொழிலாளர்கள், வேலையின் தன்மை ஆகியவற்றை பற்றி ஆராயும் உளவியல்.
  - **கல்வி உளவியல் (Educational Psychology)** கல்வியில் உளவியல் கோட்பாடுகளின் பயன்பாடு,
  - **மருத்துவ உளவியல் (Clinical Psychology)-** மருத்துவத்துறையில் உளவியலின் பயன்கள். நோய்கள்,நோய்களின் தன்மை, மருத்துவர் மற்றும் நோயாளியின் தன்மைகள் ஆகியவற்றை பற்றி ஆராய்தல் ஆகியன இதில் அடங்கும்.
  - **குற்ற உளவியல; (Criminal Psychology)-** குற்றபின்னணி, குற்றத்தின் தன்மை, குற்றவாளிகளின் இயல்பு, குற்றத்தின் உளவியல் தன்மை ஆகியவற்றை இத்துறை ஆராய்கிறது.

- **கல்வி உளவியல்**
- கல்விச்சூழலுக்கேற்ப மாணவரிடையே ஏற்ப்படும் நடத்தை மாற்றத்தை பற்றிக் கற்பது கல்வி உளவியல். கற்றல் நடத்தையை திட்டமிட்டபடி செம்மைப்படுத்தி மாணவர்களின் ஆளுமையை மேம்படச்செய்வது கல்வி உளவியல். கல்வி உளவியலை வரையறுத்தவர் - கோல்ஸ்னிக்.
- **கல்வி உளவியல் சில வரையறைகள்:**
- பிறப்பிலிருந்து முதுமை வரைக்கும் ஒருவரது கற்றல் அனுபவங்களை விவரிப்பதுதான் கல்வி உளவியல். **குரோ மற்றும் குரோ**
- கல்வியுடன் தொடர்புடைய நடத்தை மற்றும் ஆளுமைத்திறன் ஆகியவற்றின் முழு அளவையும் உள்ளடக்கியது கல்வி உளவியல் - **ஸ்கின்னர்**
- கற்றலில் இரண்டு நடத்தைகள் இன்றியமையாதது.
- உள்வரும்போது நடத்தை (பூஜ்ய நடத்தை **– Entry Behaviour)**
- வெளியேறும்போது நடத்தை **(Exit Behaviour)** இவ்விரு நடத்தைகளுக்கிடையே தான் கற்றல் நடைபெறுகிறது.

- **கல்வி உளவியலின் மையப்பொருள்** -
- குழந்தை வளர்ச்சி மற்றும் முன்னேற்றம். ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை சிறப்பாக செய்வதற்கு குழந்தை வளாச்சி பற்றிய அறிவை கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும் என்று முதலில் வலியுறுத்தியவர் - **ரூசோ**(18ம் நூற்றாண்டில்). குழந்தை கல்வியை அதன் உளவியல் பண்புகளுக்கு ஏற்ப அமைத்தலின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியவர் - **பெஸ்டலாசி.(கல்வி உளவியலின் தந்தை)**
- சிறுகுழந்தையின் கற்றலில் பொருட்கள் முந்தி, சொற்கள் பிந்தி (**Things Before and Words after**) என்று வலியுறுத்தியவரும் பெஸ்டலாசியே.
- **கல்வி உளவியலின் தன்மை(Nature of Educational Psychology)**
- கற்பவர் கற்பிப்பவர் இடையேயான இடைவினையை மேம்படுத்த – கல்வி உளவியல் பயன்படுகிறது.
- மாணவர்களின் திறனறிந்து (மீத்திறன் மிக்கோர், சராசரி, கல்வியில் பின்தங்கியோர்) அதற்கேற்ப கற்பித்தல் முறைகளை வகுக்க – கல்வி உளவியல் பயன்படுகிறது.

- வகுப்பறை சூழல், நடத்தை மாற்ற உத்திகள், திட்டமிட்டு கற்பித்தல், நுண்ணிலை கற்பித்தல், கல்வி நுட்பவியல் ஆகியவற்றை கற்றுக்கொண்டு அவற்றை கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் பயன்படுத்தி கல்வியை மேம்பாடு அடையச்செய்ய – கல்வி உளவியல் பயன்படுகிறது.
- **கல்வி உளவியலின் பரப்பெல்லைகள் (Scope of Educational Psychology)**
- கல்வி உளவியல் எதனை கற்பிக்க வேண்டும் எப்படிக் கற்பிக்க வேண்டும் ஆகியவற்றை வரையறுக்கிறது. **(What to teach and How to teach)** இதனை வரையறுத்தவர்கள் **ப்ளேர், ஜோன்ஸ் மற்றும் சிம்சன்** ஆகியோர் வரையறுத்தனர்.
- **கல்வி உளவியலின் எல்லைகளை வரையறுத்தவர்கள்**
- லிண்ட்கிரன்
- கோல்ஸ்னிக்
- காரிசான்
- **கோல்ஸ்னிக்** கருத்துப்படி கல்விஉளவியலின் உட்கூறுகள் - 7
- தனியாள் வேறுபாடு
- ஊக்கம்
- கற்பித்தல் முறைகள்
- மதிப்பிடும் முறைகள்
- வகுப்பறை மேலாண்மை
- மனநலம்
- மாணவரிடையே ஒழுக்கத்தை உருவாக்குதல்
- **லிண்ட்கிரன்** கருத்துப்படி கல்வி உளவியலின் உட்கூறுகள் - 5. அவை
- கற்பவர்
- கற்கும் முறைகள்
- கற்கும் அனுபவங்கள்
- கற்கும் சூழ்நிலைகள்
- கற்பவர்

www.Padasalai.Net

  - **கற்பவர்:**
- கல்வி உளவியல் கற்பவரை மையமாக கொண்டது. கற்பவரின் திறன், நுண்ணறிவு, வாழ்வியல் இலக்குகள், தற்கருத்து போன்றவை எவ்வாறு தனியாட்களுக்கேற்ப மாறுபடுகிறதோ அதற்கேற்ப கற்பிக்க உதவுகிறது.
  - **கற்பிக்கும் முறைகள்:**
- மாணவரின் பல்வேறு வளர்ச்சிப்படிநிலைகளுக்கேற்ப பொருத்தமான கற்பித்தல் முறைகளை தேர்ந்தெடுக்க கல்வி உளவியல் உதவுகிறது.
  - **கற்கும் அனுபவங்கள்:**
- பொருத்தமான கற்றல் அனுபவங்களை தீர்மானிக்க கல்விஉளவியல் மிகவும் அவசியம்.
  - **கற்றல் சூழ்நிலைகள்:**
- கற்பவர் கற்பிப்பவர் ஆகியோருக்கு இடையே வரும் சூழல் மற்றும் வகுப்பறை சூழல் ஆகியன எவ்வாறு கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை பாதிக்கிறது என்பதை அறிய கல்வி உளவியல் பயன்படுகிறது.

- **ஆசிரியர்:**

❖ சிறந்த செயல்திறன் மிக்க ஆசிரியரின் திறன்கள், ஆளுமைப்பண்புகள், ஆர்வம், நாட்டம் ஆகியன கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை பாதிக்கின்றன. எனவே ஒரு சிறந்த ஆசிரியரை உருவாக்க கல்வி உளவியல் அறிவு மிகவும் அவசியம்.

www.Padasalai.Net